# ***DEPOSITION OF WITNESS***

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

## CC No.451/2015

## PW: 1

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.அறிவழகன் | Taluk : | சிவகங்கை |
| Father's Name : | திரு.செம்பிராயன் | Calling : | LW-1 |
| Village : | சிவகங்கை | Age : | 64 |

Solemnly affirmed by Thiru.S.Allan Border, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 19th day of August 2025.

Signature of Witness.

(Accused present. Additional Public Prosecutor Present. Defence counsel present)

முதல் விசாரணை :

நான் தற்சமயம் சிவகங்கை மாவட்டத்தில் வசித்து வருகிறேன். நான் திருப்பூர்மாவட்டத்தில் 2019 ம் ஆண்டுமே மாதத்தில் திருப்பூர் கூட்டுறவு நகர வங்கியின் மேலான்மை இயக்குநராக பணிபுரிந்து ஓய்வு 31.05.2019 அன்று ஓய்வு பெற்றுள்ளேன். நான் 13.08.2014 முதல் கும்பகோணம் சரக கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளராக பணியாற்றினேன். நான் பணியாற்றிய காலத்திற்கு முன்பு கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 19.03.2011 மற்றும் 07.05.2013 ஆகிய காலங்களில் மேற்படி சங்கதில் நடைபெற்ற பல்வேறு முறைகேட்டிற்காக எனது முன்னவரான துணை பதிவாளர் அவர்கள் மேற்படி

சங்கத்தினை தமிழ்நாடு கூட்டுறவு சங்க சட்டப்பிரிவு 82 இன் கீழ் ஆய்வு செய்ய உத்தரவிட்டுள்ளார்கள். துணை பதிவாளர் செயல்முறை ஆணை ந.க.எண்.1800/2013/நாள் 13.05.2013 இன் படி கூட்டுறவு சார் பதிவாளர் கள அலுவலர் திரு.வீ.சிவக்குமார் அவர்களை விசாரணை அதிகாரியாக நியமித்துள்ளார். அவரும் மேற்படி சங்கத்தினை விசாரணை செய்து அச்சங்கத்தில் விதை கொள்முதல், விதை விற்பனை, உரம் விற்பனை, குடிமைப்பொருள் விற்பனை மற்றும் சாக்கு விற்பனை ஆகியவற்றில் ஏற்பட்ட முறைகேட்டிற்காக 18.11.2013 இல் துணை பதிவாளர் கும்பகோணம் சரகத்திற்கு விசாரணை அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

2) இந்நிலையில் நான் ஆகஸ்டு 2014 இல் துணை பதிவாளராக பொறுப்பேற்று எனது பார்வைக்கு மேற்படி விசாரணை அறிக்கையும், ஆவணங்களும் வைக்கப்பட்டது. மேற்படி விசாரணை அறிக்கையில் முறைகேடு நடந்தது உண்மை இருப்பது தெரிய வந்ததால் இதில் சம்மந்தப்பட்ட செயலர் (பொறுப்பு) திரு.ஜோசப் மார்டின் அவர்களையும், அங்காடி விற்பனையாளர் திரு.ஏ.சுப்பிரமணியன் அவர்களையும் பொறுப்பாக்கப்பட்டு, ஜோசப் மாட்டின் ரூ.19,62,000/-மும், சுப்பிரமணியன் ரூ.3,20,000/- ஆக மொத்தம் ரூ.22,82,000/- தொகைக்கு குற்றவியல் நடவடிக்கை எடுக்க வணிக குற்ற புலனாய்வு பிரிவு காவல் கண்காணிப்பாளர் சென்னை அவர்களுக்கு துணை பதிவாளர் ந.க.எண்.2036/2013/நாள் 20.08.2013 இன் படி என்னால் மேற்படி புகார் அனுப்பப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் அனுப்பிய புகார் தான்.

அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அப்புகார் **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி ஜோசப் மார்டின் தரப்பு குறுக்கு விசாரணை :

நான் எதிரிக்கு எதிரான ஆவணங்கள் மற்றும் வாக்குமூலங்கள் ஆகியவற்றை கருத்திற்கொள்ளாமல் உண்மை தன்மையை தெரிந்துகொள்ளாமல் இயந்திர கதியாக புகாரை அனுப்பியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. புகாரில் கண்டுள்ள விவரங்கள் உண்மைக்கு புறம்பானவை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
Thanjavur at Kumbakonam.